JSC-1-TA

# கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நீங்கள் பெறப்போகிற இழக்க போகிற பலன்கள் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** கிறிஸ்தவர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, "நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாக நிற்கவேண்டியிருக்கும்." ஆனால் இந்த நியாயதீர்ப்பிற்கான நோக்கம் என்ன? இயேசு நம்முடைய பாவத்திற்கான கிரையத்தை செலுத்தி விட்டாரா தேவன் அவைகளை நினைவு கூறுவது இல்லையா?

அப்படியானால், கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கவேண்டும்? இந்த நியாயதீர்ப்பிற்கும் இரட்சிப்பிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா. இரட்சிப்பு என்பது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொள்ளும்போது அவனுக்கு அளிக்கப்படுகிற இலவசமான ஈவாகும்.

ஆனா கிறிஸ்துவின் நியாசனம் என்பது அவர் நம்மை இரட்சித்ததற்கு பிறகு நாம் வாழும் முறையை சார்ந்து இருக்கிறது. கிறிஸ்துவுக்காக நாம் செய்திட்ட அணைத்தும் அன்று பதிப்பிடபட்டு பலனளிக்கப்படுகிறது.

ஆனா கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறதா? அங்கு பலன்களை இழக்க நேரிடுமா, பதிப்பையும் கனத்தையும் பரலோகத்தில் நித்தியமாக நமது ஸ்தானத்தை இழக்க வாய்ப்பு இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கு வேதாகமத்தில் இருந்து விடைகளை பெற்றுக்கொள்ள நமக்கு உதவியாக இன்றைக்கு Dr. எர்வின் லட்சர் நம்முடன் இருக்கிறார், மூடி திருச்சபையின் மூத்த போதகர் சிக்காகோ, இல்லினோசிஸ். நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்**: வணக்கம். உங்கள்ள பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்கள், அப்படியானால் வேதம் சொல்கிறது நாம் மரித்த பிறகு, கிறிஸ்த்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம் நிற்ப்போம் என்று சொல்கிறது. இந்த நியாயத்தீர்ப்பு என்னது? சரி, என்னுடைய நண்பரோடு இதை பற்றி நான் பேசிய உரையாடலை நீங்கள் கேட்கும் படி விரும்புகிறேன், Dr. எர்வின் லட்சர், மூடி திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார். இந்த கேள்விக்கு அவர் பதில் கொடுக்கிறார். கவனியுங்கள்.

**டாக்டர். எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், இது மறுக்க முடியாத உண்மை என்று நினைக்கிறேன். என்னன்னா, இயேசு கிறிஸ்துவின் கண்களை பார்ப்பதை கற்பனை செய்து பாருங்க, நேருக்கு நேராக,

நம்முடைய பேச்சுல இருந்து எல்லாத்தையும் அவர் மதிப்பிட்டு பார்க்க போகிறார். அதைதான் வேதாகமமும் நமக்கு போதிக்கிறது நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வந்து நின்றிடுவோம். அதாவது, இதன் கிரேக்க வார்த்தை பீமா இதற்கு காரணம் என்னன்னா ரோமர்களும் கிரேக்கர்களும் வந்து நிற்கும்படியான ஒரு நியாயாசனத்தை உருவாக்கினார்கள், அந்த மேடையில் தான் நியாயாதிபதிகள் அவர்களுக்கு போட்டி பந்தயங்களில் ஜெயிக்கும்போது பரிசுகள் மற்றும் வெகுமதிகளை கொடுப்பார்கள்.

மேலும் அப்போஸ்தலனாகிய பவுலும் சொல்கிறார் இன்றைக்கு 2 கொரிந்தியர் ஐந்தாம் அதிகாரத்தில் நாம் பார்க்கிறபடி, “நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியா சனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.”

இவர் கிறிஸ்தவர்களை பற்றி சொல்லுகிறார். அவர் தன்னை பற்றி இங்கு பேசுகிறார். இவர் உங்களையும் என்னையும் பற்றி சொல்லுகிறார். அநேகற்கு ஒரு எண்ணம் இருக்கு இயேசு கிறிஸ்து நம்ம பாவங்களுக்காக மரித்துவிட்டார், அதனால, எந்தவித மதிப்பீட்டு நிலையும் இல்லாம பரலோகத்டிற்குள் பிரவேசிப்போம் என்கிறார்கள். வேதம் மிக தெளிவாக கூறுகிறது, நாம் இயேசு கிறிஸ்துவால் மதிப்பிட படுவோம், ஒவ்வொருவருக்கும் இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** நீங்களும் நானும், கிறிஸ்தவர்களாக இருபதால, இயேசு கிறிஸ்துவே நம்மை நியாயந்தீர்ப்பார், இந்த நியாயத்தீர்ப்பை

குறித்து நாம் அதிகம் கேள்விபடாததற்கு காரணம் என்ன? என்ன நடக்க போகிறது? Dr லட்சர் விளக்கமளிக்கிறார்:

**எர்வின் லட்சர்:** சரி, ஜான், நிறைய தவறான புரிந்துகொள்ளுதல்கள் இருகிறது. உதாரணமாக, எங்கிட்டையே சிலர் சொல்ல கேட்டிருக்கிறேன், "சரி, கல்வாரி எல்லாத்தையும் போக்கிடுச்சுள்ள? அதாவது, நா இயேசுவை விசுவாசித்ததும், அவர் என்னுடைய பாவங்களை எல்லாம் யடுத்து கடலின் ஆழத்திற்குள் போட்டு விட்டார் அதை அவர் ஞாபகத்தில் வைத்துகொள்ள மாட்டாரே. அதனால நா எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தாலும் என்னால எந்த நியாயத்தீர்ப்பும் இல்லாமல் பரலோகம் போக முடியுன்னு சொல்வாங்க."

இது, தவறான புரிந்துகொள்ளுதல், ஏன்னா உண்மை என்னன்னா இயேசு கிறிஸ்துவுக்குள் நம்முடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்படுகிறது நாம் என்றென்றைக்கும் தேவனுடையவர்களாக இருக்கிறோம். அதனால நீதியின் படியாக நாம் தேவனுக்கு முன்பாக நிற்கணும் அதுதான் பரலோகம் போவதற்கு வழியாக இருக்கிறது. ஆனா, அதுக்குன்னு நியாயாசனத்தில் உத்கார்ந்து தேவன் என்னுடைய வாழ்க்கையை மதிப்பிட்டு பார்க்க மாட்டார் என்று சொல்வது சரியாக இருக்காது.

இங்க ஒரு வசனம் இருக்கிறது - 2 கொரிந்தியர் அதிகாரம் ஐந்து - இதை கவனிங்க. கேளுங்க, "நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும், ஏனென்றால்

சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு இப்படியாகும்."இந்த வசனமானது நமக்கு நியாயத்தீர்ப்பு இல்லை நாம் எப்படிவேண்டுமானாலும் வாழலாம் என்ற நம்பிக்கை யூட்டும் செயலை விட்டு விட நமக்கு எச்சரிப்பை கொடுப்பதாக இருக்கிறது.

யோசித்து பாருங்க. இங்க அனனியா சப்பீரா இருந்தாங்க. நமக்கு தெரிந்த வரைக்கும் அவங்களும் கிறிஸ்தவர்கள் தான், அவங்க இயேசுவை விசுவாசித்தாங்க, இருந்தாலும் நியாயந்தீர்க்கப்பட்டாங்க- இது அப்போஸ்தலர் ஐந்தாம் அதிகாரம் - அவங்க போய் சொன்னதால அந்த நியாயத்தீர்ப்பின்படி அவங்க செத்து போனாங்க. கற்பனை செய்ய முடியுமா அவங்க பரலோகத்துல போய் நின்னுட்டு, "ஏன், தேவனே எங்களை நியாயந்தீர்த்தீர்? கல்வாரி அனைத்தையும் மூடிவிட்டது என்று பேதுரு சொன்னாரே என்பார்களோ?

சரி, இப்ப, உண்மையாவா, கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தினால் அவை சட்டரீதியாக தீர்க்கப்படுகிறது. இருந்தாலும் நீதிமானக்கப்பட்ட பாவியை தேவன் நியாந்தீர்க்கிறார். அதாவது இரட்டை பாவங்கள் செய்த தாவீது கொலைசெய்தான் விபசாரம் செய்தான் அதனால் பர்சேபாலுக்கு பிறந்த குழந்தை இறந்து போனது. அது ஒரு நியாயத்தீர்ப்பு. சரி, தாவீதின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதும் சுவாரஸ்யமாக தான் இருக்கு. தாவீது பரலோகத்தில தான் இருப்பார். கீழ்படியாமையினால் தேவனால் பூமியில் நம்மை நியாயந்தீர்க்க

முடியுஅம் என்றால், நாம அவருக்கு முன்பாக நேருக்கு நேர் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிறற்க்கும் போது அபப்டி செய்ய மாட்டார் என்று சொல்வது நிச்சயம் சரியானது அல்ல.

**ஆன்கர்பெர்க்:** இப்ப, கிறிஸ்துவின் நியாயாசனம் மற்றும் பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு இவை இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? கவனிங்க:

**எர்வின் லட்சர்:** ஜான், வேதாகமத்தில் இரண்டு நியாயத்தீர்ப்புகள் இருப்பதை அநேகருக்கு இன்னும் தெரியல புரிஞ்சுக்காம இருக்காங்க. அதுல ஒரு நியாயத்தீர்ப்பு வந்து, "பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு". இங்க இதுவரைக்கும் காலா காலமா கிறிஸ்துவை இரட்சகர் என்று விசுவாசியாதவர்கள், இவரே மெய்யான தேவன் என்று நம்பாதவர்கள் வந்து நிற்ப்பார்கள். இவங்க எல்லாரும் ஒரே நேரத்தில் தேவனால் நியாயந்தீர்க்கப்படுவார்கள், அதுமட்டுமல்ல, அவங்க நியாயத்தீர்ப்பு நரகமாக இருக்கிறது. ஆனாலும் நரகமும் எல்லாருக்கும் ஒரே மாதிரி இருக்காது.

இருந்தாலும் அதே மாதிரித்தான், இப்ப நாம சொல்ற பரலோகத்தில் சம்பவிக்கும் நியாயத்தீர்ப்பும் இருக்கும். இது கிறிஸ்தவர்களுக்கான நியாயத்தீர்ப்பு. இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நடக்க போகிற நியாயத்தீர்ப்பானது விசுவாசிகள் எல்லாரும் நிச்சயம் பரலோகத்தில் பிரவேசிப்பார்களா மாட்டார்களா என்பதை பற்றியதாக இருக்காது. அதாவது, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க

போகிற எல்லாரும் உண்மையில் பரலோகத்துல தான் இருப்போம். எல்லாருக்கும் நரகம் ஒரே மாதிரி இருக்கதுன்ற மாதிரி, பரலோகமும் எல்லாருக்கும் ஒரே மாதிரி இருக்காது. அங்க பலதரப்பட்ட பொறுப்புகள் இருக்கிறது என்பது உண்மை.

இப்ப, அநேகர் சொல்வதை கேட்டிருக்கிறேன், "சரி, கிறிஸ்துவர்களுக்கு நியாயத்தீர்ப்பு இருக்கிறதென்று நீ நம்பினால், நம்ம கிரியைக்கு தகுந்த பலன் இருக்குமே என்பார்கள்." சரி, ஒன்றை உங்களுக்கு தெளிவு படுத்துகிறேன் இரட்சிப்பிற்கு முன்பாக நம்முடைய கிரியைகளுக்கு எந்தவித பலனும் கிடையாது. வேதம் மிக தெளிவாக அழகாக எடுத்து சொல்கிறது, " கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு, இது உங்களால் உண்டானது அல்ல.

இப்போது கூட இதை கேட்டு கொண்டு இருக்கிறவர்களில் யாராவது நாம பரலோகம் போவோமா மாட்டோமா என்று நம்மடைய கிரியைகளின் அடிப்படையில் நாம நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நினைத்துகொண்டு இருந்தால், அது தவறானது. அவங்க என்ன செய்யணுன்னா தம்மை விசுவாசிக்கிற அனைவருக்கும் நித்திய ஜீவன் என்னும் ஈவை அவர் கொடுப்பதனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அதை பற்றுகொண்டால் போதும். ஆனா என்ன இருந்தாலும், கிறிஸ்துவை விசுவாசித்த பிறகு, நம்முடைய கிரியைகளினால் நாம் நியாயந்தீர்க்கபடுவோம்.

சரி, ஜான், நாம சொன்னதுபோல,இந்த மாதிரி யோசிக்கிற சிலர் இருக்காங்க, “ நம்ம, கிரியைகள் எல்லாம் துவண்டு போய் இருக்குது, அதனால, எப்படி தேவனுக்கு நம்ம கிரியைகள் பிரியமாக இருக்க முடியும்? சரி, இதுதான் அந்த நற்செய்தி. நாம இரட்சிக்கப்பட்ட பிறகு, வேதம் சொல்கிறது நாம இரட்சிக்கப்பட்டத, “நற்கிரியைகளை செய்வதற்காகத்தான்,” இந்த நற்கிரியைகள் தேவனுக்கு பிரியமானவைகலாக ருக்கிறது. அதுதான் உண்மையும் கூட - வரபோகிற நிகழ்சிகளில் இதை பற்றி நாம் அதிகமாக பார்க்க போகிறோம் - நம்முடைய கிரியைகள் எல்லாம் துவண்டு போகும் என்பது உண்மை. ஆனா நற்செய்தி என்னன்னா, இயேசு கிறிஸ்து இந்த கிரியைகளை எல்லாம் பிதாவிற்கு ஏற்றதாக மாற்றுகிறார். வேதம் சொல்கிறது நாம் இயேசு கிறிஸ்து மூலமாக பிதாவிற்கு பிரியமான ஆவிக்குரிய பலிகளை செலுத்திட வேண்டுமாம்.” அதனால தான் இயேசு வெளிப்படையாகவே மக்களிடம் சொல்கிறார் நீங்க உண்மையாக இருந்தா அதற்கேற்ற பலனை பெறுவீர்கள்.

உதாரணமாக, லூக்கா பதினாலாம் அதிகாரத்தில் திரும்ப பலனை கொடுக்க முடியாது குருடர்கள் சப்பாணிகள் போன்றவர்களை பந்திக்கு அழைப்பதை குறித்து கூறுகிறார். ஏன் அப்படி சொல்கிறார் என்றால் உங்கள் நீதிக்கான பலன் உயிர்த்தெழுதலின் போது உங்களுக்கு அளிக்கப்படும். நம்முடைய கிரியைகளுக்கும் தேவனுடைய பார்வையில் பலன் இருக்கிறது. இன்றைக்கு நாம் வாழும் வாழ்க்கை

முறையானது நித்தியத்தில் தாக்கத்தை உண்டாக்கும் என்பதை புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

**ஆன்கர்பெர்க்:** கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும் என்று நினைக்கிற கிறிஸ்தவன் பலனை பெற்றுகொள்ளும்படிதான் அப்படி இருக்கிறான் என்று சொல்வது சுய நலமாக இருக்காததா? அது தப்பில்லையா?தேவனை பொருத்தவரைக்கும், நிச்சயம் இல்லை. கவனிங்க.

**எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், அதிகமா இதைபத்தி கேட்டிருக்கிறேன், "நாம தேவனை நேசிப்பதினால் அவருக்கு ஊழியம் செய்யணுமே தவிர பலனை எதிர்பார்த்து இருக்க கூடாதுதான" இது வந்து ரொம்ப பக்தி பரவசம் போல இருக்குது. சரி, இருக்கட்டும், தேவன் நம்முடைய ஆராதனைக்கும் ஊழியத்திற்கும் பாத்திரராக இருக்கிறார் இதுல பலன் கிடைத்தாலும் கிடைக்கலைன்னாலும் ஒண்ணுமில்ல. பலன் கொடுக்கிற யோசனை நம்முடைய யோசனை இல்லை; நம்மில் பிரியப்படுகிற பிதாதான் நமக்கு பலன்கொடுக்க விரும்புகிறார். நம்மை ஆசீர்வதிக்க வேண்டும் என்பது பிதாவினுடைய விருப்பம் அதனாலதான் புதிய ஏற்பாடு முழுவதும் நிறைய பேரை நாம் பார்க்கிறோம், புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும், பலன்களினால் ஊக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள். சரி, நாம் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கான காரணங்களில் ஒன்று சுயநலம் இல்லாமல் இருப்பது. ஆனா இன்றைக்கு உங்களை ஒரு கேள்வி கேட்க்கிறேன்.

கிறிஸ்துவை பிரியபடுத்த வேண்டும் என்று விரும்புவதால் தேவனுக்கு ஊழியம் செய்வதில் தவறு இருக்கிறதா? அவரை பிரியப்படுத்துவது எவ்வளவு முக்கியம் என்பதை புரிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அதாவது, அதை பற்றி இப்போது யோசித்துக்கொண்டு இருக்கிறேன், ஜான், அதாவது இயேசுவை முகமுகமாக நேரடியாக பார்க்கும் நிலை! அவர்கிட்ட இருந்து, நல்ல ஊழியன் என்பதை கேட்க்க காத்திருக்கிறேன்!

அப்போஸ்தலனாகிய பவுல் என்ன சொல்கிறார் தெரியுமா - இது ரொம்ப முக்கியமான ஒரு வேத பகுதி. ஏற்க்கனவே இதை சொல்லிட்டோம் இருந்தாலும் இதை நீங்க தெளிவாக புரிந்துகொள்ளும்படி மறுபடியும் உங்களுக்காக வாசிக்க விரும்புகிறேன். அவர் 2 கொரிந்தியர் 5:10ல சொல்லும்போது சொல்றாரு, “நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிபடவேண்டும்,” அதினிமித்தமே, நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமர் போனாலும் அவருக்கு பிரியமாக இருப்பதே நாடுகிறவர்களாக இருக்கிறோம்.”மேலும் அவர் சொல்கிறார், “நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வந்திடுவோம்.” அதுமட்டுமில்ல, இதை சொன்னது பிறகு பதினோராம் வசனத்தில் சொல்கிறார், “ஆகையால், கர்த்தருக்கு பயபப்டதக்கது என்று அறிந்து, மனுஷருக்கு புத்திசொல்லுகிறோம்.”

அநேகர் இதை பார்க்கும்போது என்ன யோசிக்கிராங்கன்னா, இங்க, அப்போஸ்தலனாகிய பவுல் அவிசுவாசிகளுக்கு பேசுவதாக நினைக்கிறார்கள், ஆனா இங்க அவர் நம்மகிட்டதா பேசறார். சரி, இப்ப கொஞ்சம் நேரம் எடுத்து இந்த காரியங்கள் எல்லாத்தையும் ஒன்றாக இணைத்து இயேசு கிறிஸ்துவின் நியாயாசனம் பயப்படும் அளவிற்கு உண்டானது அல்ல என்பதை புரிதுகொள்ள போகிறோம். ஆனா,இருந்தாலும், அவருடைய வருகையின் போது நாம் வெட்கப்பட்டு நிற்காத நிலையிலான வாழ்க்கையை கொண்டிருப்பது அவசியம்.

என்னதா சொல்லவர்ரே? ரொம்ப எளிமையானது. பலன்களை பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஓடுவது தவறல்ல நம்முடைய குறிக்கோள் இயேசுவை பிரையப்படுத்தனும் அவருடைய பலனை பேரனும் என்பதை இருந்தா போதும். சரி, இதை மனதில் வைத்துகொண்டு, பலன்களினால் ஊக்குவிக்கப்பட்ட மனிதர்களை குறித்து வேதாகமத்தில் இருந்து இப்போது பார்க்கலாம். இயேசு ஊக்குவிக்கப்பட்டார்? ஏன்? அவருக்கு முன்பாக வைக்கப்பட்ட சந்தோஷத்தின் பொருட்டு, சிலுவையை அவர் சகித்தார்."

ஆபிரகாமை கதை ஏன்னா அவன் தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்கள் உள்ள நகரத்திற்கு காத்திருந்தானே? எபிரேயர் பதினோராம் அதிகாரத்தை என்ன சொல்வீர்கள்? மோசே உந்துதல் பெற்றால் ஏன்னா வரப்போகிற பலனுக்காக அவன் காத்திருந்தான்.

பவுல் சொல்கிறார், “என்னுடைய ஓட்டம் வெறுமையாக போகாதபடுக்கு சத்தியத்தை பற்றிக்கொண்ட நிலையிலே நான் ஓடுகிறேன்.” இந்த எல்லாத்துக்கும் காரணம் என்னன்னா நாம் நேர்த்தியாக ஓட உந்துதலை பெற்றிடவேண்டும். அதாவது, ஜோனதான் எட்வர்ட் சொல்வது எனக்கு ரொம்ப பிடிக்கும், மிகப்பெரிய இறையியலாளர், சொன்னார், அவருடைய விருப்பம் என்ன தெரியுமா, “இங்க எவ்வளவு உண்மையாக இருக்க முடியுமோ அந்த அளவிற்கு எதிர்காலத்தில்  சந்தோஷத்தை பெற முடியும் உண்மையாக இருக்கணும்.”இது சுயநலமான ஒரு எண்ணம் கிடையாது. அவர் இயேசுவை பிரியப்படுத்த விரும்புகிறார் நீங்களும் விருப்பப்படலாம், அதுதான், முக்கியமான உந்து சக்தியாக இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** இன்னொரு கேள்வி. தேவன் கிறிஸ்துவுக்காக வாலும் கிறிஸ்தவர்களுக்கு பலன் கொடுக்க விரும்புகிறார் என்றால், அந்த பலனும் நேருக்கு நேர் கிடைக்கும் ஒன்றாக இருக்குமா, அல்லது இந்த செயலுக்கு இதுதான் பலன் என்று இருக்குமா? அதற்கான பதில், இல்லை என்பதா. நம் தேவனை பொறுத்தவரை, நம்முடைய தகுதிக்கு மிஞ்சின பலன்களை உதாரதுவமாக நமக்கு தந்திடுவார். கவனிங்க:

**எர்வின் லட்சர்:** அதாவது பலன்களை பற்றி நாம பேசும்போது ரொம்ப முக்கியமான ஒரு விஷயத்தை புரிந்துகொள்ளவேண்டும், நாம ஏதோ ஒரு வருமானத்தை பற்றியோ பணத்தை பற்றியோ இங்க பேசுவது இல்லை- இத்தனை நாள் வேலை என்பதல்ல. இதுவந்து

காசோலைகள் போன்றது அல்ல. வேதம் என்ன போதிக்கிறது என்று உங்களுக்கு தெரியுமா, நாம கேட்பதற்கு நினைப்பதற்கும் மிக அதிகமாக தேவனால கொடுக்க முடியுமே? அதாவது, நாம சொல்லற மாதிரி, பலன்கள் என்பது பாரம்பரிய எண்ணப்படியானது அல்ல அது வார்த்தையை புரிந்துகொள்வதில் தான் இருக்கிறது. பிதா தம் பிள்ளைகளுக்கு கொடுப்பதில் பிரியமாக இருக்கிறார்.

எதனால நாம அவரை சேவிக்கும்படியான வாய்ப்பை கொடுத்திருக்கிறார் என்று உங்களுக்கு சொல்கிறேன். ஏன்னா அவர் நாம இதைவிட பெரிய பொறுப்புகளுக்கு தயாராக இருக்கிறோமா என்று நம்மை அவர் சோதித்து பார்க்கிறார். இப்ப, இங்க நாம, தேவனை நேசிப்பதினால் செய்யணுன்னு ஆசைப்படறோம், நாம அவரை நேசிப்பதினால், அவரை பிரியப்படுத்த விரும்புகிறோம். நம்முடைய சிருஷ்டிகர் நம்மில் கொண்டிருக்க நினைக்கிற அனைத்து காரியங்களையும் உடையவர்களாக இருக்க விரும்புகிறோம் - இதுதான் உத்வேகத்தை கொடுக்கிறது, இந்த மாதிரி நாம் வாழும்போது, இதோடு கூடவே, தமை விசுவாசிக்கிரவர்களுக்கு தேவன் கொடுக்கிற பலன்களும் கிருபையாக வந்து சேர்ந்திடும். ஒவ்வொரு பலன்களையும் நாம் தேவனுக்கு உண்மையாக இருப்பதையும் நம்முடைய நேர்மையை கனப்படுத்தும்படி கொடுக்கப்படுகிற வெகுமதிக்கான சந்தர்ப்பமாக பார்க்கவேண்டும். இன்னொரு காரியத்தை நாம் பார்க்க இருக்கிறோம், பலன்களை இழக்கும் சூழ்நிலைக்கும் வாய்ப்பு

இருக்கிறது, இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்தில் இதை இழக்கவும் வாய்ப்பு இருக்கிறது, அதிகமாக பெறுவதற்கும் வாய்ப்புகள் இருக்கிறது. மேலும் நித்திய வாழ்வின் நிலைகளை யோசிக்கும்போது, நம்முடைய புரிந்துகொள்ளுதலின் தன்மை அதில் மிகவும் குன்றியதாக காணப்படுகிறது.

*****

**ஆன்கர்பெர்க்:** இப்ப அடுத்த கேள்வி. கிறிஸ்துவின் நியாயாசனத்தை பற்றி சொல்லும்போது, கிறிஸ்தவர்கள் தங்களுக்கு கொடுக்கப்படும் கிரிடங்களை கொண்டு போய் இயேசுவின் பாதத்தில் வைக்க மாட்டார்களா - அப்ப கிறிஸ்துவை நாம ஆரம்பத்திலயே சந்திப்பதால், நம்முடைய வாழ்க்கை முறையை பற்றி கவலைப்பட அவசியமில்லைதானா? உண்மையில் கவனிக்க வேண்டியது இது இல்ல. கவனிங்க.

**எர்வின் லட்சர்:** ஜான், ஒவ்வொரு முறையும் யாராவது இதை சொல்லும்போது ஒரு டாலர் கிடைச்சிருக்கனுன்னு நினைப்பேன், “நாம, சும்மா போய் கிறிஸ்துவுக்கு முன்பாக நம்ம கீரீடங்களை இறக்கி வைப்போம்ன்னு தோனலையே? அதனால இங்க நான் வாழ்கிற வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி இருந்தாலும் பரவாயில்லை ஏன்னா நித்தியத்திற்குள் நுழைந்த பத்து நிமிடங்களில், இங்க என்ன நடந்தது எப்படி இருந்தது என்பதை எல்லாம் நிச்சயமா நா மறந்திடதா போறேன் அதுதானே நியாபகம் இருக்குன்னு சொல்ல முடியாது,” சரி,

சில விஷ்யங்கள சொல்றேன். முதலாவதாக, நீங்க இங்க வாழ்கிற எல்லா விதங்களும் நித்தியத்தில் ஒரு தாக்கத்தை உண்டாக்கும். நித்தியத்திற்குள் நுழைய பத்து நிமிடங்கள் மட்டுமே இருந்தாலும் அதுலும் இயேசு கிறிஸ்துவுக்காக நீங்க எப்படி வாழ்ந்தீங்க என்பதை குறிப்பதாக தான் இருக்கிறது, இது ரொம்பவும் முக்கியமான ஒன்று. ஆனா, இரண்டாவது, பலன்கள் எல்லாம் நாம இயேசுவின் பாதத்தின் கீழ வைப்பதற்காக மட்டும் கொடுக்கபப்டுவதில்லை, அதாவது, நம்மிடம் கிரீடங்கள் இருந்தா சந்தோஷமா அவர் பாதத்துல வைத்திடுவோம். அதை பற்றி எந்த விவாதமும் எனக்கு இல்லை. ஆனா அந்த கிரீடங்கள் மட்டுமே பலன்கலாகிடாது.

சரி, சில இடங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் நீதியின் கிரீடத்தை பற்றி பேசுகிறார் அபப்டின்னா எதிர்காலத்தில் பலவிதமான கிரீடங்கள் கிடைக்கப்படுவதை பற்றி நாம பார்க்க போகிறோம் - நிச்சயம் நிறையா இருக்கும்.

சரி, இப்ப இந்த விளக்கத்தை பற்றிதான் நாம பார்க்க இருக்கிறோம், அதாவது பலன்கள் அனைத்துமே எதிர்காலத்தில் கொடுக்கப்படும் பொறுப்புகள் மற்றும் சிலாக்கியன்களாக இருக்கிறது. அதாவது, நம்மிடம் கிரீடங்கள் இருந்தா, அதை சந்தோஷமா கிறிஸ்துவின் பாதத்தில் வைத்திடுவோம். அவர் திரும்பவும் அதை நமக்கு தந்திடுவார் ஏன்னா வேதம் சொல்கிறது நாம நித்திய நித்தியமாய் அவரோடு இருக்க போகிறோம். ஆனா முதல்ல கிரீடங்கல்தான் அந்த

பலன் இயேசுவின் பாதத்தில் வைக்கப்படும் கிரீடத்திற்கு ஒப்பானது என்ற எண்ணத்தை மாறிடனும். இதுவும் முக்கியம், அதுவும் முக்கியம், நீங்களும் கிறிஸ்துவும், ஒருவருக்கு ஒருவர், நீங்க அப்படியே அவருக்கு முன்பாக நிற்க போறேங்க. வேதம் சொல்கிறது, சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைகாவது ஏற்ற பலனை அடைந்திடுவான்."

**ஆன்கர்பெர்க்:** நீங்க ஒருவேளை யோசித்துக்கொண்டு இருக்கலாம், நான் ஒரு கிறிஸ்தவன், ஆனா நா கிறிஸ்துவை போல வாழ வேண்டிய விதத்தில் வாழ்வது இல்ல, அதனால நா பரலோகத்துக்குள்ள மட்டும் போயிட்ட போதும் அங்க பின்னால வரிசையில உட்கார்ந்துக்கிறேன் வேறு எந்த எதிர்பார்ப்பும் இல்லை என்றிடலாம்," சரி, உண்மைய சொன்னா, அப்படி நடக்க வாய்ப்பு இல்லை. கேளுங்க.

**எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், ஒருநாள் ஒரு மனுஷன் எங்கிட்ட சொன்னா, "நா ஒரு கிரிச்த்வனம் ஆனா கிறிஸ்துவுக்காக நான் வாழல."அதாவது, என்னன்னா, நா பரலோகம் போனா போதும் அங்க போய் கடைசி வரிசையில் உட்கார்ந்துகிறேன், அதுவே எனக்க்கு சந்தோசம்." சரி, இது ரொம்ப பக்திபரவசமாக தோணுது. ஒருவேளை கிறிஸ்துவுக்கு பிராயமாக நடந்து கொள்ளாதவர்கள் தான்கடைசி வரிசையில் உட்கார வேண்டும் என்ற நிலை உண்டானால் உங்கள் கதி என்ன? அவர் நீங்க முதல் வரிசையில் இருக்க விரும்பும்போது நீங்க

அவருக்கு பிரியமா அவருக்காக வாழாம கடைசி வரிசையில் போய் உட்கார்ந்தா எப்படி இருக்கும்?

கவனிங்க, இயேசு கிறிஸ்துவின் நியாயாசனம் என்பது கிறிஸ்துவோடு நமக்கு இருக்கும் உறவின் அடிப்படையில் இருக்கவேண்டும் மேலும் அவர் நம்மை தமது இரத்தத்தை கொடுத்து மீட்டு இரட்சகராக இருப்பதால் அவருக்கு பிரியமாக இருக்கவேண்டும். இதுதான் முக்கியமானது. அதனால என்னுடைய அனுபவத்தில் நிறையபேர் பேசுவதை நான் கேட்டு இருக்கிறேன், “சரி, இருக்கட்டும், பரலோகத்தில் ஒரு மூலையில் இடம் கிடைத்தால் போதும். அவங்கள்ள சிலர் பூமியில் ஒரு சிற இடம் இருப்பதை கொண்டு திருப்பதி அடையாமல் வாழ்கிறார்கள். அவங்களாக முடிந்த அளவு பெரிய வீட்டை கட்ட விரும்புகிறார்கள் அதிகமான பொக்கிஷங்களை சம்பாதிக்க விரும்புகிறார்கள். நான் சொல்லட்டுமே, இது வியர்த்தமாக இருக்குது. இவங்க பரலோகத்தில் சின்ன இடத்தில் திருப்தியா இருப்பாங்களா, ஆனா இந்த பூமியில் இருக்க முடியாதாம்!

ஒன்றை புரிந்துகொள்ளுங்கள், நண்பர்களே, இயேசு கிறிஸ்துவினுடைய சிங்காசன நியாயத்தீர்ப்பு ரொம்ப முக்கியமானது. வரப்போகிற நிகழ்சிகளில் கிறிஸ்து என்ன எதிர்பார்க்கிறார் எப்படி நம்மை நித்தானிக்க போகிறார் என்பதை பற்றி நாம் பார்க்க இருக்கிறோம். நம்முடைய பாவங்களை நாம பார்க்க முடியுமா எந்த அடிப்படையில் நாம் மதிப்பிடப்பட போகிறோம் என்பது போன்ற கேள்வி பதில்களை

பார்க்க இருக்கிறோம். ஆனா இப்போதைக்கு ரோமர் புத்தகத்தில் சொல்லியிருப்பதை நினைவு படுத்த நினைக்கிறேன், “ஒவ்வொருவனும் தேவனுக்கு தன்னை குறித்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.”

அதாவது, நான் பாடும்போது பாடற்குலுவுடன் சேர்ந்து பாட விரும்புவேன். சபையாரோடு சேர்ந்து பாட விரும்புவேன். போது இடத்தில் நா தனியா பாடினதே கிடையாது. ஒரு விஷயத்தை நீங்கள் புரிந்துகொள்ள விரும்புகிறேன் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும் போது, நாம பாடற்குளுவோடு சேர்ந்து நிற்க மாட்டோம். யாருக்கு பின்னாலையும் உங்களாக ஒளிந்து கொள்ள முடியாது யாரும் உங்களுக்கு பதிலாக போய் முன்னால நின்னு சிறப்பா விளையாடி காட்ட முடியாது. நீங்களும் இயேசு கிறிஸ்துவும் மட்டும்தான் இருப்பீங்க. நீங்க மட்டும் உங்களுடைய எல்லா விளக்கத்தையும் கையில பிடித்திட்டு நிற்கணும். அது, ரொம்ப கஷ்டமா இருக்கும், அது ஆறுதலாகவும் இருக்கும் என்பதை வருகிற அடுத்த நிகழ்சிகளில் நாம் ஆராய்ந்து நிதானமாக பார்க்க இருக்கிறோம்.

நினைவிருக்கட்டும், நாம எல்லாருமே இதை எதிர்கொள்ள போகிறோம். எல்லாரும் ஒன்றாக இருக்கபோகிறோம். நாம இயேசு கிறிஸ்துவை பார்க்க போகிறோம் அவர் நமக்கு உதாரத்துவமாக பலன்களை அள்ளி கொடுக்கும்போது ஆச்சரியத்துடன் நிற்க போகிறோம். இதுவரைக்கும் அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுகொள்ளாமல் இருந்தால், இதுவரை அவரை விசுவாசியாமல்

இருந்தால், நீங்க உங்களோடு நற்கிரியைகளினால் அவரிடம் வந்து நிற்க முடியாது என்பதை சொல்லி கொள்ளுகிறேன். உங்கள் பாவங்களோடு அவரை ஏற்றுகொள்ள முன்வந்திருங்கள், நீங்கள் அவருடைய குமாரர் குமாரத்திகளாக மாறின பிறகு, அதற்கு பிறகு நீங்க ஒருநாள் அவருக்கு முன்பாக நிர்ப்பீர்கள் என்ற எண்ணத்தோடு அவருக்கு பிரியமானபடி வாழ முற்படுங்கள், நாம் அனைவரும் ஒருநாளில், இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். அதுதான் உண்மையான நேரமாக இருக்கும். எல்லாம் வெளிப்படும் நேரம் அதுதான். ஆனா வேதம் சொல்கிறது போல அது தேவன் ஒவ்வொருவரையும் புகழக்கூடிய நேரமாகவும் அமைந்திருக்கும். அவர் நமக்கு கொடுத்த காரியங்களின் அடிப்படையில் வாழ்ந்திருக்கிறோம் என்பதை அவர் மேன்மைபடுத்தி கூறிடுவார். இயேசு சொல்கிறார், “என்னுடைய நாமத்தினிமித்தம் ஒருவனுக்கு ஒரு கலச தண்ணீர் கொடுத்தாலும் அதற்கேற்ற பலன் இல்லாமல் போகாது.” நீங்கள் தொடர்ந்து எங்களோடு இணைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன் அந்த நாளில் என்ன நடக்கும் என்பதை குறித்த நேயர்களின் கேள்விகளை குறித்து நாம் பேசிட இருக்கிறோம். உங்களுக்கு சொல்லுகிறேன், இன்றைக்கு நீங்கள் யாராக இருக்கிறீர்களோ அதுவே நாளை நித்தியத்தில் நீங்கள் எப்படி இருப்பீர்கள் என்பதை நிர்ணயிப்பதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** உங்களுடைய எல்லா பாவங்களையும் சுமந்துகொண்டு தேவனுடைய சமுகத்தில் அவருக்கு முன்பாக நிற்க முடியுமா என்ற எண்ணத்தோடு போராடிகொண்டிருந்தாள், வேதம் சொல்கிற நற்செய்தியும் அறிவுரைகளையும் இருக்கிறது. கவனிங்க:

**எர்வின் லட்சர்:** சுவிசேஷத்தின் நற்செய்தி என்னவென்று உங்களுக்கு தெரியுமா? ஒருவேளை இன்றைக்கு கேட்டுக்கொண்டு இருக்கிறவர்களில் யாராவது கேட்கலாம், "அதாவது, நா பெரிய பாவம் செய்திருக்கேன்," நீங்கள் ஒரு விஷயத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன் இயேசு கிறிஸ்து நம் பாவங்க்ளுகாக மரித்தார். நம்முடைய பாவம் நம்மை தேவனை விட்டு பிரிக்க கூடாது. நம்முடைய பாவங்கள் நம்மை தேவன் பக்கம் இழுக்கிறது ஏன்னா இயேசு கிறிஸ்துவிடம் தான் தீர்வு இருக்கிறது. தேவன் உங்களை மாணிக்க முடியாத அளவிற்கு பெரிய பாவங்களை செய்திருக்கிறேன் என்று நீங்கள் உணர்வீர்களானால், உங்களுக்கு ஒன்று சொல்லட்டுமா. தேவனுடைய பிரசன்னத்தில் நீங்கள் நிற்பதற்கு தேவையான அனைத்தையும் இய்சு செய்துவிட்டார் என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டியது அவசியம் அப்படி விசுவாசித்தால், நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் நித்தியா ஆக்கினையிலிருந்து நீங்கள் மீட்கப்படுவீர்கள். இதை மிக தெளிவாக நாம புரிந்துகொள்ளணும். கிறிஸ்துவில் நமக்கு இருக்கும் விசுவாசத்தினால் மன்னிக்கபடுகிறோம். இது கிரியைகளினால் உண்டாவது கிடையாது.

நம்முடைய இருதயத்திலிருந்து உணர்த்துதலோடு தேவனிடம் வந்து, ஆண்டவரே, என்னை படைக்கிறேன் என்பதல்ல. ஏன்னா நம்முடைய இதய பூர்வமாக நாம் கொண்டு வரும் அனைத்திலும் பாவம் இருக்கிறது. ஆனா தாழ்மையோடு கிறிஸ்துவுக்கு முன்பாக வர வேண்டும். அவரை இரட்சகராக நாம் ஏற்றுகொள்கிறோம். அப்போது அவருடைய குமாரர் குமாரத்திகளாக மாறுகிறோம் அப்போது அவர் நம்மை தம்முடைய சொந்த பிள்ளைகள் என்னும் அடிப்படையில் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக இருந்து செயல்படுவார், நம்மை அவர் மதிப்பிடுவார். தேவையான ஒழுக்கத்தை தண்டனையை தந்திடுவார். அதைதான் இன்றைய நிகழ்ச்சியில் நாம் பார்த்துகொண்டு வருகிறோம்.

இது, எல்லாருக்கும் பொருந்தும் என நம்புகிறேன். நீங்கள் கிறிஸ்தவராக இருந்து இயேசு கிறிஸ்துவுக்காக வாழாமல் இருந்தா, இன்றைக்கே மனந்திரும்பி விசுவாசித்து ஏற்றுகொள்ளுங்கள் உங்களை ஒப்புகொடுங்கள், இயேசு உதாரகுணமுல்லவர் அதனால இன்றைக்கு உங்களுக்கான பலனை அடையும்படிக்கு இதை செய்திடுங்கள். கிறிஸ்தவர்களாகிய நம்மை நியாயந்தீர்ப்பவர் நம்முடைய இரட்சகர் நம்முடைய சகோதரர் என்பது நினைவில் இருக்கட்டும். அது இயேசு கிறிஸ்துவின் நியாயாசனம். அதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதுவரை அவரை விசுவாசியாமல் இருந்தால், இன்றைக்கு முன்வந்திடுங்க. அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருக்காக

வாழ்ந்திடுங்கள் ஏன்னா நாம் நேசிக்கும் அவருக்கு ஒருநாள் நாம் கணக்கு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015  A.T.R.I.